AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 1,2 PRINTED SIZE: 474.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 2,436.00 ITEM ID: MY0048672459

24 JUN, 2022

# Cash aid useless if electricity tariffs rise, PH leaders tell govt

Tamil Malar, Malaysia





## மின்கட்டணம் உயர்த்தப்படுமானால் ரொக்கப்பண உதவி அர்த்தமற்றது

கோலாலம்பூர், ஜுன் 24-

தெனாகா நேஷனல் பெர்ஹாட் ( டிஎன்பி) அடுத்த மாதம் மின்கட்டணத்தை உயர்த்தப் போவதாக அறிவித்திருக்கும் வேளையில், சிரமப்படும் மக்களுக்கு கூடுதல் ரொக்கப் பண உதவி வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. ஒருபுறம் மின்சாரக் கட்டணத்தை உயர்த்திவிட்டு மறுபுறம் ரொக்கப்பண உதவி வழங்குவது அவர்களுக்கு எந்த வகையிலும் நன்மை பயக்காது என்று பக்காத்தான் ஹராப்பான் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்த தெனாகா நேஷனலை பிரதமர் இஸ்மாயில் சப்ரி யாக்கோப் அனுமதிக்கக் கூடாது என்று ஜசெக தலைவர் லிம் குவான் எங் வலியுறுத்தியுள்ளார். அதே வேளையில், அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினத்தால் மக்கள் அவதிப்பட்டுவரும்போது மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது சரியல்ல என்று அமானா கட்சியின் துணைத் தலைவர் சாலாஹுடின் ஆயுப் சுட்டிக்காட்டியுள்ளார்.

பக்காத்தான் தலைவர்களான அவ்விருவரும் நேற்று தனித்தனியாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

பிரதமரின் 63 கோடி வெள்ளி ரொக்கப் பண உதவி ஏமாற்றமளிக்கும் விதத்தில் உள்ளதோடு விரிவான வகையிலும் இல்லை என்று லிம் சொன்னார்.

அடுத்த மாதம் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த தெனாகா நேஷனலை அனுமதிக்க மாட்டோம் என்று பிரதமர் முதலில் அறிவிக்க வேண்டும். அந்நிறுவனத்தால் எரிவாயுவின் விலையையும் நிலக்கரி விலையையும் எளிதில் சமாளிக்க முடியும் என்றார் லிம்.

மேலும் படிக்க பக்கம் 2



Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.